# ஜப்பானில் வேலை செய்ய வேண்டும் என்ற உங்கள் கனவை நனவாக்க ஒரு சிறந்த வாய்ப்பு!

## விஷேட திறமையுடைய பணியாளர் திட்டம் (SSW)

### தாதி பராமரிப்பு சேவைத் துறை (ஆண் /பெண்)

விஷேட திறமையுடைய பணியாளர் (SSW) திட்டத்தின் கீழ், தாதி பராமரிப்புப் சேவைத் துறை (Nursing Care) வேலைவாய்ப்புகளுக்கான ஆள்சேர்ப்புத் திட்டம் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் நடைபெறவுள்ளது.

குறிப்பிட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள், எதிர்வரும் 2026 அக்டோபர் 26 ஆம் திகதிகாலை 9:00 மணிக்கு, பத்தரமுல்ல, கொஸ்வத்த, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, இலக்கம் 234 இல் அமைந்துள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் கேட்போர் கூடத்திற்கு (Auditorium) சமூகமளிக்குமாறு அழைக்கப்படுகின்றீர்கள். தயவு செய்து அனைத்துத் தொடர்புடைய சான்றிதழ்களையும் அவற்றின் பிரதிகளையும் (Photocopies) உங்களுடன் எடுத்துவரவும்.

**குறிப்பு: இதற்கு முன்னர் ஜப்பான் வீசாவுக்கு விண்ணப்பித்து நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள், இந்த வேலைவாய்ப்பிற்கு விண்ணப்பிப்பதைத் தவிர்க்கவும்.**

**அடிப்படைத் தகைமைகள்**

- வயது 18 முதல் 35 வயதிற்குள் இருக்கவேண்டும்.
- ஜப்பானிய மொழித் தேர்ச்சிப் பரீட்சையான JLPT N4 அல்லது JFT இல் A2.2 நிலையை (Level) அல்லது அதைவிடக் கூடிய தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- திறன் பரீட்சையில் (Skill Test) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- உடம்பில் பச்சை குத்திய அடையாளங்கள் (Tattoos) இருத்தல் கூடாது.
- க.பொ.த (உயர்தரம்) பரீட்சைக்குத் தோற்றியிருத்தல் வேண்டும். (அரசாங்க அல்லது தனியார் பாடசாலையொன்றில் 13 வருடக் கல்வியைப் பூர்த்தி செய்திருப்பது கட்டாயமாகும்.)
- உயரம் – பெண்களுக்கு 150 செ.மீ அல்லது அதற்கு மேலும், ஆண்களுக்கு 160 செ.மீ அல்லது அதற்கு மேலும் இருத்தல் வேண்டும்.
- எடை– பெண்களுக்கு 40 கிலோகிராம் (Kg) அல்லது அதற்கு மேலும், ஆண்களுக்கு 50 கிலோகிராம் (Kg) அல்லது அதற்கு மேலும் இருத்தல் வேண்டும்.
- பார்வைக் குறைபாடுகள் ஏதும் இருத்தல் கூடாது.

**Nதவையான ஆவணங்கள்:**

- பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பபடிவம் (விண்ணப்பபடிவம் www.slbfe.lk என்ற இணையத்தளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளது)
- தேசிய அடையாள அட்டை
- கடவுச்சீட்டு (Passport)
- JLPT அல்லது JFT சான்றிதழ்
- பாடசாலை விலகல் சான்றிதழ் (School Leaving Certificate)
- க.பொ.த (உயர்தரம்) சான்றிதழ்
- திறன் பரீட்சை முடிவுத்தாள் (Skill Test Result Sheet)

**மேலதிக விபரங்களுக்கு: 1989**

**(ஆள்சேர்ப்பு நடவடிக்கைகள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஊடாக மாத்திரமே மேற்கொள்ளப்படும்)**

# இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்